## உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டம் (புற நெகும) -2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரை

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்திற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி,2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான செயற்திட்ட செலவினம் ரூபா. 15,771,835 ஆக இருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறான செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்திற்கான செலவினம்** |
|---|---|
| | **ரூபா** |
| தளபாடங்கள், பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி வன்பொருள் | 73,095 |
| செயற்பாட்டுக் கிரயம் | 8,169,360 |
| ஆலோசனை சேவைகள் | 7,293,093 |
| மூலதனமாக்கப்பட்ட கடன் வட்டி | 236,287 |
| மொத்தம் | 15,771,835 |

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்தின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | **ஐ. அ. டொலர்** | **ரூபா** |
|---|---|---|
| பெறப்பட்ட ஆரம்ப முற்பணம் | 500,000 | 66,679,550 |
| கழி:- பற்றுதல்கள் | 379,151 | 50,323,373 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 988,977 |

| | | |
|---|---|---|
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 120,849 | 15,367,200 |
| | ========= | ========= |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 செயற்திட்டத்தின் ஆரம்பிப்பு

செயற்திட்ட உடன்படிக்கை 2011 ஒக்தோபர் 21 இல் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் 08 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2012 யூலை மாதத்தில் தொடங்கப்பட்டிருந்தது.

### 3.2 நிலையான சொத்துக்களின் பதிவு

இச்செயற்திட்டத்தின் முகாமைத்துவ கூறினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முள்னேற்ற செயற்திட்டத்திற்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2013 ஒக்தோபர் 30 வரையும் இச்செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டோ அல்லது கணக்கீட்டு பதிவேடுகளிற்கு கொண்டுவரப்பட்டோ இருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

செயற்திட்ட நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டிலிருந்து தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், 2012 யூலை மாதத்திலேயே தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் பூர்த்தியாக்கலை உறுதிப்படுத்துவதற்கு திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், இந்தச் செயல்நடவடிக்கை திட்டத்தில் நிதி இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அதன்விளைவாக செயலாற்றலின் கண்காணிப்பு வினைத்திறனுடன் செய்யப்பட முடியவில்லை.